## தென்காசி நகர்மன்றம்

## 09.09.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள் 1**

### நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் தென்காசி நகராட்சியினை மூன்றாவது சிறந்த நகராட்சியாக தேர்வு செய்த மாண்புமிகு **தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும், **மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் திரு.K.N.நேரு** அவர்களுக்கும் இந்நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் நன்றியும், பாராட்டி கொண்டு வரப்படும் தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**<u>தீர்மான எண் : 139</u>**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 2**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண். 76ப்பி 6928 வாகனத்திற்கு இரண்டு டயர்களும் பயன் படுத்த இயலாத நிலையில் உள்ளது. அதனால் இரண்டு புதிய டயர்கள் மற்றும் டயர் டியூப்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 23,000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மேற்படி வாகனத்திற்கு இரண்டு புதிய டயர்கள் மற்றும் டயர் டியூப்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 23,000/— மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1687/2022/எச்1

**<u>தீர்மான எண் : 140</u>**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 3**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் சுற்றித் திரியும் பன்றிகளால் பொதுமக்களுக்கும், பொதுசுகாதாரத்திற்கும் இடையூறாக உள்ள பன்றிகளை கோட்டாட்சியர் அவர்களின் அனுமதி பெற்று பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50,000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** பொதுமக்களுக்கும், பொதுசுகாதாரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் பன்றிகனை பிடித்து அப்புறப்படுத்தவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1671/2022/எச்1

**<u>தீர்மான எண் : 141</u>**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 4**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் சுற்றித் திரியும் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாவும், பொது மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள். மருத்துவமனைகளில் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதன் பொருட்டு தெரு நாய்களின் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் 500 நாய்கள் உள்ளதாக தெரிகிறது.

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை ) எண் 181 நாள்.,05.04.2013 ம் தேதிய அரசாணையில் விலங்குகள் அமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் மூலம் நாய்களை பிடித்து கருத்தடை மேற்கொள்ளவும், நாய் ஒன்றிக்கு ரூ. 700/— வீதம் மொத்த செலவினம் மேற்கொள்ளவும், செலவினம் மேற்கொள்ளப்பட்ட பின் செலவினத்தில் 50 சதவீதம் விலங்குகள் நல வாரியத்திலிருந்து நாய் ஒன்றிக்கு ரூ.300/— மான்யம் பெற்றுக் கொள்ளவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மத்திய அரசின் விலங்குகள் நலவாரியத்தினால் அங்கீகாரம் பெற்ற JEEVA KARUNYA ANIMAL WELFARE CHARITABLE TRUST NAGARKOVIL நிறுவனத்திற்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நாய் ஒன்றினை பிடித்து அதற்கு கருத்தடை அறுவை சிகிச்சை அளித்து மூன்று நாட்கள் உணவுகள் வழங்கவும், நாய் ஒன்றிக்கு ரூ. 700/—க்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் JEEVA KARUNYA ANIMAL WELFARE CHARITABLE TRUST NAGARKOVIL என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் , உத்தேச செலவினம் ரூ. 500000/— ( ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.

அ.கு. தெருக்களின் சுற்றித் திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்யவும், JEEVA KARUNYA ANIMAL WELFARE CHARITABLE TRUST NAGARKOVIL என்ற நிறுவனத்திற்கு பணி

உத்திரவு வழங்கவும் , உத்தேச செலவினம் ரூ. 500000/– ( ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 17632022/எச்1

**தீர்மான எண் : 142**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 5

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள லாரிகள் ஆட்டோ மற்றும் தள்ளு வண்டிகள், புகை தெளிப்பு இயந்திரங்கள் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பணிகள் பதிக்கப்பட்டு வருகின்றன. அதில் தினசரி ஏற்படும் சிறு பழுதுகளை சரி செய்து பணியில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதாலும்,. அதனால் ஏற்படும் செலவினங்களை மேற்கொள்ள பொதுசுகாதாரப் பிரிவிற்கு நிலையான முன்பணமாக ரூ.5000/– அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. பொதுசுகாதாரப்பிரிவின் அவசரம் அவசியம் கருதி வாகனங்களில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை அவ்வப்போது சரி செய்யவும், அதற்கான செலவினத்திற்கு பொதுசுகாதாரப்பிரிவிற்கு நிலையான முன்பணம் ரூ.5000/– அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 143**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 6

இந்நகராட்சிக்கு சொந்தமான TN76 P6928 க்கு தகுதிச்சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள 16.08.2022 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரு. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ், 3/514, செங்கோட்டை மெயின் ரோடு செங்கோட்டை | ரூ.106920/– |
| 2 | கணேஷ் மோட்டார் ஓர்க்ஸ், புதுகுடியிருப்பு நாகர்கோவில். | ரூ.117900/– |
| 3 | ஸ்ரீ விநாயகர் மோட்டார் ஓர்க், 31/ஜி பாபநாசம் மெயின்ரோடு அம்பாசமுத்திரம். | ரூ.111400/– |

அ.கு. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்ட கொட்டாக்குளம்,ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1558 /2022/எச்1)

**<u>தீர்மான எண் : 144</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 7

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கீழ்க்கண்ட வாகனங்களின் உள்ள டயர்கள் ரீ பட்டன் செய்ய முடியாத நிலையில் உள்ளதால் , வாகனங்களுக்கு புதிய டயர்கள் மற்றும் டயர் டியூப்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,25,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வாகன எண். | டயர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | TN76 AM 8815 | 4 எண்ணம் |
| 2 | TN76 AM 7258 | 4 எண்ணம் |
| 3 | TN76 AM 8823 | 4 எண்ணம் |
| 4 | TN76 AM 7283 | 2 எண்ணம் |
| 5 | TN76 AM 7288 | 2 எண்ணம் |
| 6 | TN76 AM 8827 | 2 எண்ணம் |
| 7 | TN76 F 8885 | 2 எண்ணம் |

அ.கு. பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள மேற்படி வாகனங்களுக்கு புதிய டயர்கள் மற்றும் டயர் டியூப்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,25,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1816/2022/எச்1

**<u>தீர்மான எண் : 145</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 8

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 76 AB 7615 விளம்பர வாகனத்திற்கு Invertor Battery வாங்கி சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டபடியால் மேற்படி வாகனத்தினை இயக்க முடியவில்லை. மேற்படி வாகனத்திற்கு புதியதாக Invertor Battery வாங்கிட உத்தேச செலவுத் தொகை ரூ13500/–க்கும், மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி 04.08.2022ம் தேதியன்று கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பைரவி பேட்டரீஸ்,<br>76/38, B–15 இரயில்வே பீடர் ரோடு,<br>தென்காசி. | ரூ11,200/– |
| 2 | ஸ்ரீ ராம் பேட்டரீ சென்டர்,<br>182,E–4/G S.N ஹை ரோடு, ஸ்ரீபுரம்,<br>திருநெல்வேலி. | ரூ11,700/– |

அ.கு: 1 மேற்படி வாகனத்திற்கு புதியதாக Invertor Battery வாங்கிட உத்தேச செலவுத் தொகை ரூ13500/–யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட தென்காசி ஸ்ரீபைரவி பேட்டரீஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 146</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 9

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 72 U 0687 குடிநீர் டேங்கர் லாரியின் தகுதிச் சான்று காலம் 11.07.2022ல் முடிவடைவதால் மேற்படி வாகனத்தினை புதுப்பிக்கவும் மற்றும் பராமரிக்கவும் உத்தேச செலவுத் தொகை ரூ75000/-க்கும், மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி 05.08.2022ம் தேதியன்று கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகா மோட்டார் ஓர்க்ஸ்,<br>3/514 தென்காசி – செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாக்குளம். | ரூ74,850/- |
| 2 | ஸ்ரீ விநாயகர் மோட்டார் ஓர்க்,<br>31/G பாபநாசம் மெயின் ரோடு<br>அம்பாசமுத்திரம். | ரூ95,800/- |

அ.கு: 1 மேற்படி வாகனத்தினை பழுதினை சரிசெய்ய உத்தேச செலவு தொகை ரூ வாங்கிட உத்தேச செலவுத் தொகை ரூ75000/-யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட தென்காசி ஸ்ரீ முருகா மோட்டார் ஓர்க்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 147</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 10

தென்காசி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் ரூ227.70 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம் (Knowledge Centre) அமைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் G.O.(Ms) No.88 நாள் 17.06.2022ம் தேதிய அரசாணையின்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் 001/2022/DO1 நாள் 27.06.2022ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட பணிக்கு 15.07.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. திரு.K.நவாஸ்கான்
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்
2. M/s PSR Construction.
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid) கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் (Technical Responsive) 21.07.2022ம் தேதியன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் அறிவுசார் மையம் (Knowledge Centre) அமைத்தல் | 227.70 | திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர் | 4.91% கூடுதல் |
| | | | M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 6.20% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலைவிகிதத்தைவிட 4.91% கூடுதலாக உள்ளது. எனவே ஒப்பந்தக்காரருக்கு விலைக்குறைத்து தருமாறு (Negotiation) இவ்வலுவலக கடிதம் எண்786/2022/இ1 நாள் 21.07.2022ம் தேதியில் கடிதம் அனுப்பப்பட்டது. இதனை பெற்றுகொண்டு விலையினை குறைத்து செய்து தர 22.07.2022ம் தேதியில் ஒப்பந்தக்காரரிடமிருந்து சம்மத கடிதம் வரப்பட்டது. அதன்பேரில் திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினைவிட 0.01% குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 148**

பழைய பேருந்து நிலையத்தில் அறிவுசார் மையத்திற்கு தீர்மானம் நிறைவேற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட இடமானது பயணிகள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்குமென நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று அறிவுசார்மையம் அமையும் இடமானது புதிய பேருந்து நிலையம் வாகன நிறுத்துமிடம் அருகே உள்ள இடத்தில் பாதுகாப்பு அறை மற்றும் காவல்துறைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் உபயோகமில்லாமல் உள்ளதால் அதனை இடித்துவிட்டு அந்த இடத்தில் அறிவுசார்மையம் அமைக்க அனைத்து உறுப்பினர்கள் சார்பாக தீர்மானிக்கப்படுகிறது.

## மன்றப்பொருள் 11

சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டத்தின் கீழ் தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட, நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை, வியாபாரச் சான்றிதழ் வழங்குவதற்கான பணி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர்அவர்களின் கடித ந.க.எண் 20789/2021/UPA1 நாள் 16.06.2022ம் தேதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட பணிக்கு 15.07.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. Mirifical careers Pvt Ltd.,. Coimbatore
2. Bharathi HR Consultancy Chennai

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid) கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் (Technical Responsive) 21.07.2022ம் தேதியன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | நிறுவனங்களின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகள் (Street Vendors) கணக்கெடுப்பு பணி செய்திடவும், அவர்களுக்கு அடையாள அட்டை (ID Card), Certificate of Vending, Preparation of City Street Vending Plan & Detailed implementation Plan ஆகியவை தயார் செய்யும் பணி | Mirifical careers Pvt Ltd.,. Coimbatore | ரூ700/- |
| | | Bharathi HR Consultancy Chennai | ரூ850/- |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் Chennai M/s Mirifical careers Pvt Ltd நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கூடுதலாக உள்ளது. எனவே ஒப்பந்தக்காரருக்கு விலைக்குறைத்து தருமாறு (Negotiation) இவ்வலுவலக கடிதம் எண்1226/2022/எப்1 நாள் 21.07.2022ம் தேதியில் கடிதம் அனுபப்பட்டது. இதனை பெற்றுகொண்டு ரூ650 என்று விலையினை குறைத்து செய்து தர 22.07.2022ம் தேதியில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து சம்மத கடிதம் வரப்பட்டது. அதன்பேரில் தயார்செய்யப்பட்ட திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: 1 மேற்படி பணிக்கு ரூ650/- விலைவிகிதம் கொடுத்துள்ள சென்னை M/s Mirifical careers Pvt Ltd. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 149</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 12

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கில் தேங்கியுள்ள 28449 கன.மீ குப்பைகளை (Legacy Waste) Bio-Mining முறையில் அப்புறப்படுத்துவதற்கு 2nd SHPC SBM (URBAN 2.0) திட்டத்தின் கீழ் ரூ203.45 இலட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர்அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் 9512/2022/SBM-1 நாள் 20.06.2022ம் தேதியில் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் 001/2022/DO1 நாள் 11.07.2022ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட பணிக்கு 22.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. திரு.K.நவாஸ்கான்
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்
2. M/s PSR Construction.
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid) கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் (Technical Responsive) 24.08.2022ம் தேதியன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கில் தேங்கியுள்ள 28449 கன.மீ குப்பைகளை(Legacy Waste) Bio-Mining முறையில் அப்புறப்படுத்துதல் | 203.45 | திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர்<br><br>M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு<br><br>4.35% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலைவிகிதத்தைவிட 0.01% குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 150</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் பொது நிதி 2022-23ம் ஆண்டின் கீழ், கீழ்கண்டபணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 காளிதாஸ் நகரில் தார் சாலை அமைத்தல் | 8.40 |
| 2 | வார்டு எண் 3 இரயில்வே ரோடு (எம்.ஜி.ஆர் நகர்) சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 6.50 |
| 3 | வார்டு எண் 5 களக்கோடி தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.65 |
| 4 | வார்டு எண் 7 நேரு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.00 |
| 5 | வாடு எண் 8 உச்சிமாகாளி அம்மன் கோவில் 4ம் தெருவில் (மைனாப்பேரி செல்லும் சாலை) மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 6 | வார்டு எண் 10 வடக்கு மவுண்ட் ரோட்டு மற்றும் மக்கான் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் இரண்டு சிறுபாலம் அமைத்தல் | 7.00 |

| | | |
|---|---|---|
| 7 | வார்டு எண் 11 பாறையடி 2ம் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 8 | வார்டு எண் 12 இரயில்வே ரோடு (கோட்டை மாரியம்மன் கோவில் தெரு) மழைநீர் வடிகால் அமைத்தல் | 4.90 |
| 9 | வார்டு எண் 13 தைக்கா தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் மற்றும் மோட்டார் ரூம் அமைத்தல் | 9.50 |
| 10 | வார்டு எண் 14 கூளக்கடை தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 7.00 |
| 11 | வார்டு எண் 15 ஹரிஹர விநாயகர் கோவில் தெருவில் சிறுபலம் அமைத்தல், சுகாதார வளாகம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் மற்றும் பழுதடைந்த குடிநீர் தொட்டி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக குடிநீர் தொட்டி கட்டிடம் கட்டுதல் | 6.50 |
| 12 | வார்டு எண் 16 கன்னிமாரம்மன் கோவில் தெருவில் தார் சாலை அமைத்தல் | 9.90 |
| 13 | வார்டு எண் 17 மரைக்காயார் பள்ளிவாசல் 2வது தெருவில் மழைநீர் வடிகால் பராமரிப்பு செய்தல் மற்றும் நடுமாதாங்கோவில் தெருவில் (தாம்சன் துவக்கப்பள்ளி அருகில்) சிறுபாலம் அமைத்தல் | 7.00 |
| 14 | வார்டு எண் 18ல் சிமெண்ட் தளக்கற்கள் சாலை மறுசீரமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 8.00 |
| 15 | வார்டு எண் 19 வடக்கு கீழக்கோவிக்கால் தெருவில் சிறுபாலம் அமைத்தல் மற்றும மழைநீர் வடிகால் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 6.00 |
| 16 | வார்டு எண் 21 சொர்ணபும் தெருவில் (ஆடறுப்பு மனை) புதியதாக மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| 17 | வார்டு எண் 22 உச்சி மாகாளி அம்மன் கோவில் 1ம் தெருவில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| 18 | வார்டு எண் 23 புலிகுட்டி விநாயகர் கோவில் தெரு மற்றும் முப்புடாதி அம்மன் கோவில் தெரு ஆகிய இடங்களில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 19 | வார்டு எண் 24 புதுமனை 5ம் தெருவில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 7.00 |
| 20 | வார்டு எண் 25 மாதாங்கோவில் 1ம் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| 21 | வார்டு எண் 26 கீழப்பாளையத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.50 |
| 22 | வார்டு எண் 27 நைனார் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |

| | | |
|---|---|---|
| 23 | வார்டு எண் 28 தெற்கு ஒப்பனை தெரு மற்றும தெற்கு கடையத் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை மறு சீரமைத்தல் சிறுபாலம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் பராமரித்தல் | 5.00 |
| 24 | வார்டு எண் 29 சுவாமி சன்னதி பஜாரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.60 |
| 25 | வார்டு எண் 30 வடக்கு ரத வீதியில் சிமெண்ட் தளகற்கள் சாலை மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | 5.50 |
| 26 | வார்டு எண் 31 சிந்தாமணியில் தார் சாலைஅமைத்தல் | 5.00 |
| 27 | வார்டு எண் 32 அணைக்கரை தெருவில் சிறுபாலங்கள் மற்றும மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 |
| 28 | வார்டு எண் 33 கீழமுத்தாரம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 7.00 |
| 29 | வார்டு எண் 8 உச்சி மாகாளி அம்மன் கோவில் 4ம் தெருவில் (மைனாப்பேரி செல்லும் சாலை) உள்ள நகர்நல மையத்தின் வடக்கு பகுதியில் இரும்பு முள்வேலி அமைத்தல் | 0.70 |
| 30 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் வேகத்தடை அமைத்தல் | 1.00 |

மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 151</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 14

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் குடிநீர் நிதி 2022-23ம் ஆண்டின் கீழ், கீழ்கண்டபணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 2 TNHB காலனி மற்றும் புதிய பேரூந்து நிலையத்தில் ஆழ்துளையுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் | 6.00 |
| 2 | வார்டு எண் 4 உடையார் தெருவில் ஆழ்துளையுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் பராமரித்தல் | 5.00 |
| 3 | வார்டு எண் 6 செங்குந்தர் புதுத்தெருவில் ஆழ்துளையுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 4.00 |
| 4 | வார்டு எண் 9 பாறையடி 2ம் தெருவில் ஆழ்துளையுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 7.00 |
| 5 | வார்டு எண் 20 SKP தெருவில் இரண்டு எண்ணம் ஆழ்துளையுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 6.00 |

மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 152</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 15

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு தலைமை நீரேற்றும் நிலையம் அமைந்துள்ள ஊர்க்காட்டிலிருந்து தென்காசி நீரூந்து நிலையம் வரையிலான 40.20 கி.மீ குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பகிர்மானம் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும் மேலும் மேற்படி நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ள பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகளை சரிசெய்யவும் நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 153</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 16

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை ரோட்டில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலத்தில் 92 எண்ணம் 250வாட் MHவிளக்குகள் உள்ளன. மேற்படி விளக்குகளுக்கு 4x16sq.mm UG அலுமினியம் கேபிள் போடப்பட்டுள்ளது. அதில் பாலத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஆர்ச்சின் தெற்கே இரண்டு புறமும் 63 எண்ணம் 250வாட் MHவிளக்குகள் உள்ளன. அதற்கான கேபிள் மிகவும் பழுதடைந்து அடிக்கடி விளக்குகள் ஒளிராமல் இருந்து வருகிறது. மேலும் மழைக்காலங்களில் மேற்படி கேபிள்களில் மின்கசிவு ஏற்படுவதால் அவற்றிக்கு பதிலாக புதியதாக 3.5 கோர் 35sq.mm UG அலுமினிய கேபிள் மாற்றியமைக்கவும், மேலும் பழுதடைந்துள்ள மெயின் சுவிட்ச் மற்றும் fuse Unit கேரியரினை மாற்றியமைத்து விளக்குகள் தடை இல்லாமல் ஒளிரச் செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ 9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 154</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 17

தென்காசி நகராட்சியில் பழைய வார்டு எண் 27 புதிய வார்டு எண் 33 ஆசாத் நகரில் பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணிக்கு தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் அ8/2587/2020 நாள் 09.02.2021ம் தேதியில் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிக்கு 16.11.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 1007 நாள் 03.12.2021ம் தேதியின்படி திருS.சந்தியாகப்பன் ஒப்பந்தக்காரருக்கு 03.12.2021ம் தேதியன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி ஆரம்பிக்கும் போது இடத்தின் பிரச்சினை காரணமாக மேற்படி வார்டில் அதன் அருகே உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆசாத்நகர் புது காலனியில் மேற்படி பணியினை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 155</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 18

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 130 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 06.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 3 மற்றும் 5ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடங்களில் பராமரிப்பு பணி மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 | திரு S,பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br><br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 0.02% குறைவு<br><br>3.50% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.பாலசுப்பிரமணியன் ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 156</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 19

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 131 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 06.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 8 மைனாப்பேரி செல்லும் சாலையில் உள்ள சுகாதார வளாகத்தினை பொதுசுகாதார பிரிவிற்கான பொருட்கள் பாதுகாப்பு அறையாக மாற்றியமைத்தல் | 3.00 | திரு S,பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 0.02% குறைவு<br>3.50% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.பாலசுப்பிரமணியன் ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 157</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 20

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 135 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 06.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவகத்தில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்துடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் | 2.20 | திரு B,முத்துக்குமாரசாமி ஒப்பந்தக்காரர்<br>திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 0.27% குறைவு<br>3.26% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.27% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருB.முத்துக்குமாரசாமி ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 158**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 21

தென்காசி நகராட்சியில் கல்வி நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 128 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 06.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | 7வது வார்டு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சத்துணவு கூடம் மற்றும் கழிப்பிடம் கட்டுதல் | 5.00 | திரு S.குமாரசாமி ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு<br>1.27% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.குமாரசாமி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 159**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 22

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 127 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 06.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 28 தெற்கு கடையத் (பாவடி) தெரு, வார்டு எண் 2 LRS பாளையம் (சாவடி வடபுறம்), வார்டு எண் 21 சொர்ணபுரம் மேட்டுத் தெரு (வடக்கு ஓரம்), வார்டு எண் 30, புதுமனை 1ம் தெரு (கீழ் கடைசி) வார்டு எண் 24 புதுமனை 5ம் தெரு, வார்டு எண் 17 ஐவராஜா கோவில் தெரு (கோவில் வடபுறம்) ஆகிய இடங்களில் உள்ள பழுதடைந்த உபயோகமற்ற சிறுமின்விசை பம்பு கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்துதல் | 3.00 | திரு A,செய்யதுஅலி ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.03% குறைவு<br>1.27% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருA.செய்யதுஅலி ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 160</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 23

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 128 நாள் 01.08.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 06.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 27 படிக்கட்டு முடுக்கு தெரு மற்றும் நைனார் தெரு ஆகிய தெருக்களில் உள்ள கைபம்புகளை அகற்றிவிட்டு சிறுமின்விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 3.00 | திரு A,செய்யதுஅலி ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு<br>1.27% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருA.செய்யதுஅலி ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 161**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 24

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான TN 76 7993 ஈப்பு வாகனம் 2004ம் ஆண்டு வாங்கப்பட்டு சுமார் 18 வருடங்களுக்கு மேலாகிவிட்டபடியால் மேற்படி வாகனத்தின் பராமரிப்பு செலவு அதிகமாகிறது. மேலும் இந்த வாகனத்தின் மூலம் ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் மன்னார்கோவில், திருமலையப்பபுரம் மற்றும் மாதாபுரம் ஆகிய நீரூந்து நிலையங்களுக்கு ஆய்வு செய்யவும் நீண்ட துாரம் பயணம் மேற்கொள்ளவும் மேற்படி ஈப்பு வாகனம் மூலம் செல்ல இயலவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கான உத்தேச செலவு தொகை ரூ9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 புது ஈப்பு வாகனம் வாங்க சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்
3 மேற்படி செலவின நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 162**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 25

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் 71 நாள் 13.09.2021ம் தேதிய அரசாணையின்படி நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22ம் ஆண்டு திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்வதற்கு புதுமனை தெருவில் சிமெண்ட் தளகற்கள் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதில் பொதுமக்கள் பங்குதொகையாக திரு.H.ஷேக் தாவூது ஆத்மியான் என்பவர் ரூ2.00 இலட்சம் ஆணையாளர், தென்காசி நகராட்சி வங்கி கணக்கில் (கணக்கு எண் 612901096397) 16.03.2022ம் தேதியன்று செலுத்தப்பட்டது. தற்போது சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 27519–37/2021/P2, நாள் 31.03.2022ன்படி மேற்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்படவில்லை. ஆகையால் மேற்கண்ட பணிக்கு பொதுமக்களின் பங்குதொகையாக செலுத்தப்பட்ட ரூ2.00 இலட்சத்தினை திரும்ப வழங்கும்படி விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்படி தொகையினை தென்காசி, திரு.H.ஷேக் தாவூது ஆத்மியான் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 தென்காசி, திரு.H.ஷேக் தாவூது ஆத்மியான் என்பவருக்கு ரூ2.00 இலட்சத்தினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 163**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 26

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் பயணிகள் மற்றும் பேரூந்து நிற்கும் இடத்தில் பெரும்பாலான விளக்குகள் ஒளிராமல் உள்ளன. ஆகையால் மேற்படி இடத்தில் போதுமான வெளிச்சம் இல்லாததால் இரவு நேரங்களில் பயணிகள் செல்வதற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்படி பேரூந்து நிலையத்தில் ஒளிராத நிலையில் இருக்கும் விளக்குகளை அகற்றிவிட்டு புதியதாக 4x20w LED குழல் விளக்குகள் 40 எண்ணங்கள் வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ12500/–க்கும் மேற்படி பயணிகளின் நலனை கருத்தில் கொண்டும் அவசர அவசியம் கருதி 06.09.2022ம் தேதியன்று கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | AVS Traade ,<br>162 சுவாமி சன்னதி,<br>தென்காசி. | ரூ12,400/- |
| 2 | பாம்பே எலக்ட்ரிக் கம்பெனி,<br>54/163 சுவாமி சன்னதி பஜார்,<br>தென்காசி | ரூ12,800/- |

அ.கு: 1 மேற்படி 4x20w LED குழல் விளக்குகள் 40 எண்ணம் புதியதாக வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ12500/-யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட தென்காசி AVS Traade நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 164</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 27

தென்காசி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய போதுமான குழாய் திருப்புனர் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2022ல் முடிவடைகிறது. எனவே மேற்படி குடிநீர் குழாய் திருப்புனர் பணிகள் அக்டோப்ர் 2022 முதல் மார்ச் 2023 வரை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ6.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவின நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 165</u>**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 28

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான மன்னார்கோவில், திருமலையப்பபுரம், மாதாபுரம் மற்றும் தென்காசி ஆகிய நீரூந்து நிலையங்களில்100HP மோட்டார்கள் பொருத்தபட்டுள்ளது .மேற்படி மின்மோட்டாரை இயக்குவதற்கு தேவையான மின்சாதன பொருட்கள் MNX225 – 3Pole Contactor 8 எண்ணங்கள் மற்றும் ML 6 – 3Pole Contactor 4 எண்ணங்கள் வாங்கி பொருத்தி அதிகரிக்கப்பட்ட குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ4.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம்அனுமதிக்கலாம்

2 மேற்படிசெலவின நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண் : 166</u>**

அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்றதலைவர்
தென்காசி நகர்மன்ற

# தென்காசி நகராட்சி
## 09.09.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 139 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 140 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | 141 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | 142 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | 143 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | 144 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 7 | 7 | 145 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 8 | 8 | 146 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 9 | 9 | 147 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 10 | 10 | 148 | பழைய பேருந்து நிலையத்தில் அறிவுசார் மையத்திற்கு தீர்மானம் நிறைவேற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட இடமானது பயணிகள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்குமென நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று அறிவுசார்மையம் அமையும் இடமானது புதிய பேருந்து நிலையம் வாகன நிறுத்துமிடம் அருகே உள்ள இடத்தில் பாதுகாப்பு அறை மற்றும் காவல்துறைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் உபயோகமில்லாமல் உள்ளதால் அதனை இடித்துவிட்டு அந்த இடத்தில் அறிவுசார்மையம் அமைக்க அனைத்து உறுப்பினர்கள் சார்பாக தீர்மானிக்கப்படுகிறது. |
| 11 | 11 | 149 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 12 | 12 | 150 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 13 | 13 | 151 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 14 | 14 | 152 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 15 | 15 | 153 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 16 | 16 | 154 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 17 | 17 | 155 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 18 | 18 | 156 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 19 | 19 | 157 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 20 | 20 | 158 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 21 | 21 | 159 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22 | 22 | 160 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 23 | 23 | 161 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 24 | 24 | 162 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 25 | 25 | 163 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 26 | 26 | 164 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 27 | 27 | 165 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 28 | 28 | 166 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |

நகர்மன்றதலைவர்
தென்காசி நகர்மன்ற